199

ஸர்வோதய பிரகடனம்

சாண்டில் ஸர்வோதய மகாநாட்டில் (7—3—'53)

ஆச்சாரிய விநோபாவின் பிரசங்கம்

YZwM95
N53
67916

...சுராலயம், திருப்பூர் :: விலை 2 அணா

பிரசுரம் நெ. 7

வினோபாஜியின்
ஸர்வோதய பிரகடனம்

வினோபாஜியின் பல பிரசங்கங்களை ஸர்வோதயத்தில் பிரசுரித்து வருகிறோம். ஆனால் பீஹாரில் சாண்டில் என்ற கிராமத்தில் நடந்த ஐந்தாவது சர்வோதய மகாநாட்டின் ஆரம்ப தினத்தில், 7-3-'53 அவர் நூறு நிமிஷம் செய்த பிரசங்கத்தைப்போல வேறு ஒன்றும் அமைந்ததில்லை.

7—3—'53ல் மகாநாட்டில் நமது ராஷ்டிரபதி ராஜேந்திர பிரசாத் பிரசன்னமாயிருந்தார். அப்பொழுது நிகழ்ந்த வினோபாஜியின் பேச்சு சர்வோதய ஊழியர்களுக்கு மட்டுமல்ல, இந்திய அரசாங்கத்திற்கும் உலகத்திற்குமே பேசியதாகும். இந்தப் பேச்சை நேரில் கேட்டவர்கள் பரவசமாகி இதை ஓர் ஸர்வோதய பிரகடனமாகக் கருதினர்கள்.

சென்ற ஆறு வருஷமாக ஸர்வோதய தத்துவம், லக்ஷியம், வழி முதலியவற்றை வினோபாஜி பிரசாரம் செய்து வருகிறார். இந்த ஒரே பிரசங்கத்தில் ஹிம்சை, அஹிம்சை; அரசாங்கத்தின் தண்ட சக்திக்கு மாறுபட்ட ஜன சக்தி; ஜன சக்தியை நிர்மாணிக்கும் வழி; கருத்துப் புரட்சியின் முக்கியத்துவம்; கிராம ராஜ்ய பிரகடனம்; பூமிதான யக்ஞம் - சம்பத்துதான யக்ஞம்; நூல் காணிக்கை; சர்வ சேவா சங்கம் முதலியவைகள் தத்துவபூர்வமாக, சாங்கோபாங்கமாக அமைந்திருப்பதால் இந்த பிரசங்கம் ஓர் ஸர்வோதய பிரகடனமாகக் கருதத்தக்கது.

இந்த மகத்துவமான பிரசங்கத்தை பல முறை ஆழ்ந்து படிப்பவர்களுக்கு ஸர்வோதய தர்மமும், அதன் கருத்துப் புரட்சியும் நன்கு விளங்கி ஸர்வோதய சமுதாயத்தை ஏற்படுத்தத் துணைபுரியும் என்று நம்புகிறோம்.

சர்வ சேவா சங்கம்,
திருப்பூர், 13-6-'53

ஸர்வோதய பிரசுராலயம்

சாண்டில் ஸர்வோதய சம்மேளனம்

வினோபாஜியின் ஆரம்பப் பிரசங்கம் (7—3—'53)

காலஞ்சென்ற கிஷோர்லால்

நான் இன்று பலவீனமான உடல் நிலையில் வந்திருப்பதால் உங்கள் மன்னிப்பை வேண்டுகிறேன். ஆயினும், நான் சொல்ல வேண்டியதைச் சுருக்கமாக உங்களிடம் தெரிவிக்க வேண்டும் என்பதே என் விருப்பம். சங்கர்ராவ் தேவ் செய்ததைப் போல, பூஜ்ய கிஷோர்லால் பாயியை நினைத்துக் கொண்டு ஆரம்பிக்க விரும்புகிறேன். எந்தப் பெரும் பணியை ஆண்டவன் நம்மிடம் ஒப்புவித்திருக்கிறாரோ, எது பற்றி நாம் ஆண்டவன் சன்னதியிலும் மக்கள் முன்பும் சங்கற்பம் செய்துகொண்டிருக்கிறோமோ அதில் அவர் பெரிதும் ஈடுபட்டிருந்தார். கர்மத்தை அகர்மமாக்க முடியும், அகர்மத்தையும் கர்மமாக்க முடியும் — இதுவே வாழ்க்கையின் திறவுகோல் என்று கீதை நமக்குச் சொல்லியிருக்கிறது. அவரது உடல் மிகவும் பலவீனமாயிருந்ததால் நாம் ஸ்தூலமான கர்மமென்று எதைச் சொல்லுகிறோமோ அதை அவர் அதிகம் செய்யமுடியாதிருந்த போதிலும், அவர் இருபத்துநான்கு மணி நேரமும் ஏதேனும் செய்துகொண்டேதானிருந்தார். ஆனால் அவர் செய்துவந்த கர்மங்கள் வெளிப்பார்வைக்கு பெரிதாகத் தோன்றியிருக்க முடியாதாயினும் கர்மம் செய்ய முடியாத

67916

நிலையிலும் எவ்வளவு பெரிய காரியங்களைச் சாதிக்க முடியு மென்பதை அவர் நமக்குக் காட்டியிருக்கிறார். எவர் களுடைய உள்ளம் தூயதோ, ஆண்டவன் அருளால் எவர்களுடைய விருப்பு வெறுப்புக்கள் எல்லாம் நீங்கி விட்டனவோ அவர்கள் இருந்துவருவதே பெரிய காரியங் களைச் சாதிப்பதற்குப் போதுமானது. உலகில் தோன்றக் கூடிய இத்தகைய மிகச் சிலருள் கிஷோர்லால் பாயி ஒருவரென நான் கருதுகிறேன். பாபுவுக்குப் பிறகு எங்களுக்கெல்லாம் அவருடைய உதவி கிடைத்து வந்தது; அவர் தமது இயற்கையான சரள மனத்துடன் எங்களை யெல்லாம் கவனித்துக்கொண்டு வந்தார். அவருடையது போன்ற சக்தி நம்முள் வேறு எவரிடமும் காணப்பட்ட தில்லை. ஆகையினால் அவரது மறைவு நமக்கு மிக்க துயரத் தை அளிக்கிறது. இந்தக் குறைபாட்டை நாம் பரஸ்பரம் காட்டும் அன்பினாலும் ஆதரவினாலும் போக்கிக் கொள்ள லாம். அத்தகைய அன்பும் ஆதரவும் உதவும் மனப்பான் மையும் நம்மிடையே இருந்துவரும் என்றும் அவைகளின் மூலமாக நம் காரியம் நிறைவேறுமென்றும் நான் எதிர் பார்க்கிறேன்.

ராஜன்பாபு, நேருஜியின் அஹிம்சைப் பற்று

நம்முடையது ஊழியர்களின் கூட்டமாகும். இங்கே சம்மேளனத்திற்கு வருகிறோம் என்றால் ஏதோ சிறிது பேசவும் செய்கிறோம். அந்தப் பேச்சும், நமது வேலையே அன்றி வேறல்ல. நாம் வருஷம் முழுவதும் ஏதோ வேலை செய்த பிறகும் கூடுகிறோமென்றால், நாம் செய்துள்ளதை ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்ய விரும்புவதோடு வரும் வருஷத்திற்குச் சிறிது தென்பு பெற்றுக்கொண்டு போகவும் விரும்புகிறோம். இத்தகைய சந்தர்ப்பங்களில் நாம் நம் கருத்துக்களை நமக்குள் பரிமாறிக் கொள்ளவும், வாங்கவும் செய்கிறோம். அவ்வகையில் நம் வேலைக்குப் பின் பலமாயுள்ளது எதுவோ, ஆதார பீடமாயுள்ளது எதுவோ அதிலும் ஒரு நோக்குச் செலுத்த வேண்டும்.

காரியத்தை எவ்வகையில் நாம் சீர்திருத்திக்கொள்ள வேண்டுமோ அதிலும் கவனம் செலுத்த வேண்டும். வேலை முறை, வேலையின் வரிசைக்கிரமம், அமைப்பு ஆகிய இம்மூன்றையும் பற்றி நாம் சிறிது ஆலோசிக்க வேண்டும். நாம் உலகத்தின் எந்த மூலையில் இருந்துகொண்டு வேலை செய்வதாயிருந்தாலும் உலகம் முழுவதையும் கருத்தில் கொள்ளாது எதையும் செய்துவிடக்கூடிய நிலையில் உலகம் இல்லை. இன்று உலகத்தில் புதிய சக்திகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன; இரு புதிய பிரவாகங்கள் பெருக ஆரம்பித்திருக்கின்றன; இரு கற்பனைகள், இரு கருத்துக்கள் இன்று ஒன்றோடொன்று மோதிப் போர் புரிந்து கொண்டிருக்கின்றன. இவ்வாறு கவனித்து, இவற்றின் மீதிருந்து பார்வையைச் சிறிதும் அகற்றாது நாம் எந்தச் சிறிய காரியத்தையும் செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம். அனைத்தையும் விழிப்புடன் பாராது காரியம் செய்வது குருட்டுத்தனமாகிவிடு மாகையால் உலக நிலைமையை நாம் கவனிக்கவேண்டியிருக்கிறது. உலக நிலைமை மிகவும் ஸ்திரமில்லாததாயிருக்கிறது என்பதை நாம் இன்று பார்க்கிறோம். இது மட்டுமல்ல, ஆபத்தானதாயும் இருக்கிறது; அதாவது, இந்த எரிமலை எப்பொழுது வெடித்தெழும் என்று சொல்ல முடியாமல் இருக்கிறது. நான் இவ்வாறு ஏதோ காரணமில்லாமல் பீதியை உண்டாக்கும் வகையில் நிலைமையை விவரிக்கிறேனென்று எண்ண வேண்டாம். உங்களை அச்சுறுத்தவும் நான் விரும்பவில்லை, நானும் அஞ்சவில்லை. ஆனால் உள்ள நிலைமையில் உங்களை கவனம் செலுத்தச் செய்யவே விரும்புகிறேன். இன்று உலகில் எப்பொழுது எவ்வாறு என்ன நடக்குமென்று சொல்லவே முடியவில்லை. உலக நிலையும் உலக மக்களின் நிலையும் இன்று இவ்வளவு ஸ்திரமில்லாததாக இருக்கிறது. இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு டில்லியில் சில அறிஞர்களும் வித்வான்களும் கூடினார்கள். அவர்கள் அஹிம்சைத் தத்துவத்தைப் பற்றிப் பரிசிலனையும் ஆராய்ச்சியும் நடத்தினார்கள். அவையெல்லாம் பத்திரிகைகளில்

வெளிவந்துகொண்டிருந்தன; நாம் அவற்றைப் படித்து வந் தோம். அதில் நம் பூஜ்ய ராஜேந்திர பாபு இப்பொழுது உலகில் உள்ள எந்த நாடும் ராணுவ பலமின்றி தன் காரியங்களை நடத்திக்கொண்டு போகத் துணியாதிருப் பதைக் குறிப்பிட்டார். மேலும், பாபுவினிடமிருந்து நாம், நேருக்கு நேராக, நம் காதுகளாலேயே உபதேசங்களைக் கேட்டிருந்தும், அவர் சொல்லியபடி நாம் ஒரு சிறிது காரியங்களும் செய்திருந்தும், இந்தியாவும் ராணுவ பலமின்றி தன் காரியங்களைச் செய்யத் துணியாதிருப் பதைக் குறித்து வருத்தமும் தெரிவித்தார். நம் மாபெரும் தலைவரான பண்டித நேரு உலகத்தின் எந்தப் பிரசினையை யும் ஆயுத பலங்கொண்டு தீர்க்க முடியாதென்று பல தடவைகளில் பேசியிருக்கிறார். இதிலிருந்து நாட்டிற்குத் தலைமை பூண்டுள்ள இந்த நம் பெரியோர்கள், எவரிடம் நாட்டை நடத்திச் செல்லும் பெரும் பொறுப்பை நாடு ஒப்படைத்திருக்கிறதோ அவர்கள், அஹிம்சையில் முழு நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கு ஹிம்சை யில் நம்பிக்கையில்லை என்பது தெளிவாகிறது. ஆயினும் ராணுவ பலத்தைப் பெருக்கவேண்டிய, அதை அதிக பலம் பொருந்தியதாக்க வேண்டிய பொறுப்பை அவர்கள் ஏற்க வேண்டிய விசித்திரமான நிலை இன்று இருந்து வருகிறது. இத்தகைய விசித்திரமான நிலையில் நாம் இருந்து வருகிறோம்.

உள்ளமும் அறிவும்

நமக்கு ஒரு விஷயத்தில் சிரத்தை இருப்பதாகத் தோன்றுகிறது. ஆனால் வேறொரு வகையில் நாம் காரியம் செய்ய வேண்டி யிருக்கிறது. விரும்புவதென்னவோ, இந்தியா வெங்கும், உலகத்திலும் அஹிம்சை பரவ வேண் டும் என்பதையே. 'நாம் ஒருவனைக் கண்டு மற்றவர் அஞ்சலாகாது, ஒருவரை யொருவர் அன்பின் மூலமாக வசப்படுத்த வேண்டும். அன்பே இறுதியில் வெற்றி பெறும். அன்பிற்கே ஜயம் உண்டு' என்ற நம்பிக்கை நம்

உள்ளத்தில் நிரம்பியிருக்கிறது. ஆனால் நம் உள்ளத்தில் வேறொன்றும் இருக்கிறது. எதை நாம் அறிவு என்று அழைக்கிறோமோ அதுவும் உள்ளத்தின் ஒரு பகுதியே. ஆயினும் ஹிம்சையின் மூலமாக எந்தப் பிரசினையும் தீராதென்று உள்ளம் கூறுகிறது. ஒரு பிரசினை தீர்ந்தது போல் தோன்றுகையிலேயே அதிலிருந்து பத்துப் புதிய பிரசினைகள் கிளைத்தெழுவதைக் காண்போமென்று உள்ளம் கூறுகிறது. ஆனால் முக்குணங்களும் நிரம்பியுள்ள நமது அறிவோ, ராணுவத்தின் உதவியை அகற்றுவதற்கில்லை என்று சொல்லுகிறது. முக்குணம் என்பது சிந்தனு சக்தியும், விழிப்பும், உண்மை உணர்ச்சியும் ஆகும். இவை மூன்றும் நம் அறிவில் கலந்திருக்கின்றன. நாம் எந்தப் பொதுமக்களின் பிரதிநிதிகளோ அவர்கள் அவ்வளவு பலம் பொருந்தியவர்கள் அல்ல. அதற்கு அவர்களுக்கு இன்னும் தகுதி வரவில்லை. ஆகையால் அவர்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் அவர்களின் பலம் பெருகும்படிச் செய்வது நம் பொறுப்பாகும். நிலைமை இவ்வாறிருக்கிறது. விருப்பமென்னவோ நிர்மாண வேலை செய்ய வேண்டுமென்பதுதான். ஆனால் அது உள்ளம் கொண்டுள்ள விருப்பமாகும். அறிவோ ராணுவ பலத்தைப் பெருக்கவேண்டுமென்று சொல்லுவதால், எவைகளின் மூலமாக ராணுவ பலம் பெருகுமோ அவைகளுக்கு ஆனவற்றைச் செய்வதிலேயே முனைகிறார்கள். ராட்டை மீது அதிக சிரத்தை, நம்பிக்கையில்லாதவர்களைப் பற்றி நான் பேசவில்லை. ஆனால் எவர்களுக்கு ராட்டையில் நம்பிக்கையுண்டோ அவர்களிடம் "ராட்டையின் மூலமாக உங்களால் படை பலத்திற்கு ஏற்பாடு செய்ய முடியுமா?" என்ற கேள்வியைக் கேட்போமானால், அவர்களுடைய அறிவும் சரி, நம் அறிவும் சரி, "முடியாது; நாம் சிறிய சிறிய கைத்தொழில்களின் மூலமாகப் போரின் ஆயத்தங்களை, ராணுவ பலத்தை உண்டாக்க முடியாது" என்றே சொல்லும்.

சமூகநலத் திட்டம்

நம் நாட்டின் 7 லக்ஷம் கிராமங்களிலும் சமூகநலத் திட்டத்தை ஆரம்பிக்கவேண்டுமென்று ஆவல் இருக்கிறது. இப்பொழுது சில ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. 'இதை இன்னும் பல கிராமங்களிலும் பரப்ப வேண்டும். நாட்டைச் செல்வமுள்ளதாக்கி, நாடெங்கும் லக்ஷ்மிதேவி நர்த்தனம் செய்யவேண்டும். நம் ஏழ்மை தொலைய வேண்டும்' என்றெல்லாம் ஆசை என்னவோ இருக்கிறது. ஆனால் நாளைக்கு உலகில் மகாயுத்தம் தோன்றுமானல் இப்பொழுது ஆரம்பித்த சமூகநலத் திட்டங்களில் ஒன்றேனும் நிலைத்திருக்கும் என்று நானும் சொல்லமாட்டேன், இதை ஆரம்பித்தவர்களும் அவ்வாறு சொல்லுவார்களென்று நான் நினைக்கவில்லை. உடனே மனித அறிவு தன் யுக்தி வாதங்களை ஆரம்பிக்கும்; உள்ளம் ஆட்டங் கொடுத்துவிடும். அறிவு உள்ளத்தின்மீது ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்து, இப்பொழுது நாட்டின் பாதுகாப் பல்லவா முக்கியமான விஷயம் என்று சொல்லும். இதை நான் ஆத்ம சோதனைக் கண்ணுடன் பார்த்துக் கூறுகிறேன். இப்பொழுது பொறுப்பு வகிப்பவர்களிருக்

கிருர்களே, அவர்களுடைய ஸ்தானத்தில் நாம் போய் அமருவோமானல் இப்பொழுது அவர்கள் செய்து வருவதை விடுத்து நாம் வேருென்றைச் செய்வோமென்று நம்மால் சொல்ல முடியாது. அந்த இடத்தின் மகிமை அது. அது விக்கிரமாதித்தியன் சிம்மாசனம் போன்றது; ஆனல் அதற்கு நேர்மாருன தன்மை உள்ளது இது.

இதன் மீது அமருவோர் ஒரு வரம்பிற்குட்பட்டு குறுகிய நோக்குடன் விஷயங்களைப் பற்றி யோசிக்கவேண்டியவர்களாக ஆகிவிடுகிறார்கள். நிர்ப்பந்தவசமாக உலகத்தின் கோபம் எந்த திசையை நோக்கி வீசுவதாகத் தோன்றுகிறதோ அதே திசையில் அதே வகையில் சிந்திக்கவேண்டிய பொறுப்பும் இவர்களுக்கு ஏற்பட்டுவிடுகிறது. பெரிய வல்லரசுகளான ருஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளைக் கண்டு பிற நாடுகள் அஞ்சுகின்றன. ஒன்றைக் கண்டால் மற்றவற்றிற்குப் பயம். அதிக சக்தியில்லாத நாடுகளான பாகிஸ்தானும் இந்தியாவும் கூட பயப்படுகின்றன. இவ்வாறு ஒன்றைக் கண்டு ஒன்று பயந்துகொண்டு, ஆயுத பலத்தினால், படை பலத்தினால் எந்தப் பிரசினையும் தீராது என்ற நம்பிக்கை உடையவர்களா யிருக்கும்பொழுது, படையை, ஆயுத பலத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கும் நம்மைக் கண்டால் வெறும் வேஷதாரிகள், வாய்ப்பேச்சு வீரர்கள் என்றே எவரும் சொல்லுவர். அவர்கள் சொல்வது உண்மை அல்லவாயினும், அவ்வாறு சொல்லுவதற்கு அவர்களுக்குள்ள உரிமையை நாம் மறுப்பதற்கில்லை. நம் உள்ளத்தில் ஒரு விஷயம் இருந்து, அதாவது நாம் மனப்பூர்வமாக ஒரு விஷயத்தை ஒப்புக்கொண்டிருந்து நிலைமையின் நிர்ப்பந்தத்தில் சிக்கிய நம் அறிவு வேறொரு விஷயத்தைச் சொல்லிவருமானால் அது வெறும் வேஷமென்று சொல்லுவதற்கில்லையாயினும் வருந்துவதற்குரிய, பார்த்து இரங்கவேண்டிய நிலைமையே என்பதில் சந்தேகமில்லை.

சற்று முன் ராஜேன் பாபு, "ஸர்வோதய சமாஜம் தன் அடிப்படைக் கருத்துக்களில் உறுதியாயிருக்க வேண்டும்; இன்றைய நிலைமையில் ஸர்வோதயத் தத்துவங்களை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு வேண்டிய சூழ்நிலையை உண்டாக்கும் பொறுப்பு அவர்களுடையதே என்று மக்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள்" என்றார். ஸர்வோதய சமாஜம் இதைச் செய்யுமானால் நாமே அமைத்துள்ள நமது இன்றைய அரசாங்கம் அதற்குப் பெரிதும்

உதவும் என்றார். நம்முள் ஒருவர் மந்திரிப் பதவியை ஏற்று அரசாங்கத்தை நடத்துவதில் கை கொடுப்பதனால் எவ்வளவு உதவி ஏற்படுமோ அதைவிட ராணுவ பலமின்றி சமூகத்தை அமைப்பதெப்படி என்பதை சமாஜம் செய்து காட்டுவதனால் அதிக உதவி ஏற்படும்.

ஜனசக்தியைப் பெருக்குதல்

என்னைப் பலர், அடிக்கடி, "நீங்கள் ஏன் வெளியி லேயே இருக்கிறீர்கள்? இந்தப் பொறுப்பை ஏன் ஏற்க மாட்டேன் என்கிறீர்கள்!" என்று கேட்கிறார்கள். அவர் களை நான், "ஏற்கெனவே இரண்டு மாடுகள் வண்டியில் பூட்டப்பட்டிருக்கையில் மூன்றாவதாக என்னையும் பூட்டிக் கொள்வதால் வண்டிக்கு என்ன உதவி ஏற்படும்?" என்று பதிலுக்குக் கேட்பதுண்டு. ஆனால் அவ்வாறு செய்யா மல் வண்டி போகவேண்டிய சாலையை வகுத்து ஒழுங்கு செய்வேனானால் பேருதவி ஏற்படும். ஆனால் நான் உண்மை யில் மாடாகவே இருப்பின் வண்டி இழுக்கத்தான் எனக் குத் தகுதியுண்டு; வழி அமைக்கவோ, காட்டவோ தகுதி யில்லை. நான் இலக்கிய பாஷையில் என் கருத்தை உருவகப் படுத்திப் பேசுவது உங்களுக்குப் புரிகிறதென்று நினைக் கிறேன். நம் பண்பாட்டில் எருதுக்கு மிகுந்த மதிப்பளிக் கப்பட்டிருக்கிறது. எருதுக்கு 'துரந்தரன்' என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. எவர் ராஜ்யத்தின் பாரத்தை, பொறுப்பைச் சுமக்கிறார்களோ அவர்கள் துரந்தரர்கள். ஆகவே நாம் துரந்தரர் ஆகவேண்டியிருக்கும். ஏற் கெனவே வண்டியிழுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண் டுள்ளவர்கள் "நாங்கள் செய்துவருவதை நீங்களும் செய்ய வேண்டாம்; நாங்கள் செய்யாமல் விட்டிருப்பவைகளை நீங்கள் பூர்த்தி செய்வீர்களென்று எதிர்பார்க்கிறோம்" என்கிறார்கள். நாம் இதைப் புரிந்துகொள்ளவேண்டும். புரிந்துகொண்டு நான் எதை லோக சக்தி அல்லது ஜன சக்தி என்று அழைக்கிறேனோ, அது எதைச் செய்வதனால் உருவாகுமோ அதில் நாம் ஈடுபடவேண்டும்.

அப்பொழுது தான் நம்மால் அரசாங்கத்திற்கு உண்மை யான உதவி ஏற்படும்; நாட்டிற்கும் தேவையான சேவை செய்தவர்களாவோம்.

ஜனசக்தி—ஹிம்சை சக்தி—தண்ட சக்தி

நாம் பிரத்தியேகமான ஜனசக்தியை உருவாக்க வேண்டுமென்று சொன்னேன். ஜனசக்தி என்பது ஹிம்சை சக்திக்கு நேர்மாறானது மட்டுமல்ல, அரசாங்கத் தின் தண்ட சக்தியிலிருந்தும் வேறுபட்டதாகும். இந்த ஜனசக்தியை நாம் உண்டாக்க வேண்டும். இன்றைய அரசாங்கத்தின் கையில் நாம் தண்ட சக்தியை ஒப்புவித் திருக்கிறோம். அந்த தண்ட சக்தியில் ஹிம்சையின் அம்சம் சிறிது இருந்து வந்தபோதிலும் நான் அதை ஹிம்சை என்று அழைக்க விரும்பவில்லை. அதனாலேயே ஹிம்சை வேறு தண்ட சக்தி வேறென்று பிரித்துக் கூறு கிறேன். ஏனெனில், அந்த தண்ட சக்தி அரசாங்கத்தின் கையில் மக்கள் அனைவரும் சேர்ந்து அளித்ததாகையால் அது ஹிம்சை சக்தி ஆகாது. ஆனால் அந்த தண்ட சக்தியைப் பிரயோகிப்பதற்கு சந்தர்ப்பமே தோன்றாத வகையில் நாடு இருந்துவரும்படி நாம் செய்ய முடியும்பொழுது தான் நாம் நம் கடமையை உணர்ந்து நிறைவேற்றியவர் களாவோம். நாம் ஜனசக்தியைப் புரிந்துகொள்ளாமல் தண்ட சக்தியையே நாடி நம் வேலையைச் செய்துவருவோ மானால் மக்கள் நம்மிடம் எதிர்பார்ப்பவைகளை நம்மால் நிறைவேற்ற முடியாமற் போவதோடு, நாம் சமூகத்திற்கு ஒரு சுமையாயும் ஆகிவிடுவோம்.

தயைப் பணியின் உண்மை மதிப்பு

நான் என் கருத்தை இன்னும் சிறிது விளக்கிக் கூறு கிறேன். தண்ட சக்தியைக்கொண்டு சேவை செய்ய முடியும், அவ்வாறு செய்வதற்கே நாம் ஆட்சிப் பொறுப்பைக் கோரினோம் என்றேன். கோரியது நம் கைக்கு வந்துவிட்டது. மேலும், மக்களுக்கு நம்மிடம்

நம்பிக்கை இருந்துவரும் வரையில் நாம் ஆட்சிப் பொறுப்பை விடுவதற்கில்லை. ஆட்சியின் மூலமாக சேவை நடைபெறுகிற தென்பது உண்மையே. ஆனால் தண்ட சக்தியின் உதவிகொண்டு சேவை செய்வதற்குத் தேவையே ஏற்படாத நிலை உருவாக வேண்டும்.

நான் ஒரு உதாரணத்தின் மூலமாக இதைத் தெளிவு படுத்துகிறேன். ஒரு போர் நடக்கிறது, சிப்பாய்கள் போரிட்டுக் காயமுறுகிறார்கள். அந்த காயமுற்ற சிப்பாய்களுக்கு சிகிச்சையும் உதவியும் செய்ய முன்வருகிறவர்கள் கருணைசீலர்கள். அவர்களுக்கு நம்மவர், பகைவர் என்ற வேற்றுமை எண்ணமே இல்லை. அவர்கள் தம் உயிரையும் பொருட்படுத்தாது சேவை செய்கிறார்கள். தாய் தம் குழந்தைகளுக்கு சேவை செய்வதைப்போன்றே எல்லாவற்றையும் செய்கிறார்கள். அவர்கள் தயாசீலர்கள், மதிப்பிற்குரியவர்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவர்கள் செய்யும் சேவை மிகவும் மதிக்கத்தக்கது என்பதை யாவரும் ஒப்புவர். ஆனால் போரையே நிறுத்தும் பணியை அவர்கள் செய்கிறார்களென்று சொல்லுவதற்கில்லை. அவர்கள் காட்டும் தயை போரை ஒத்துக்கொண்டு இயங்கி வரும் சமூகத்தின் ஒரு பகுதியே. இத்தகைய சமூகமென்ற யந்திரத்தில் உள்ள எத்தனையோ சக்கரங்களில் அவர்களும் ஒரு சக்கரமே. இந்தச் சக்கரங்கள் வெவ்வேறு வகையில் இயங்கி, வெவ்வேறு வேலைகளைச் செய்து வந்தபோதிலும் இவையெல்லாம் அந்த யந்திரத்தின் பல்வேறு அங்கங்களேயன்றி வேறல்ல. இந்தப் போரிலுள்ள சிப்பாய்கள் யந்திரத்தின் ஒரு பகுதியாயிருந்து கொன்று கொண்டிருக்க, அந்த தயாசீலர்கள் வேறொரு பகுதியாயிருந்துகொண்டு காயமுற்றவர்களுக்குச் சேவை செய்கிறார்கள். சிப்பாய்கள் செய்வது கொடூரமான காரியமாயிருக்க, அவர்கள் தயையினால் தம் காரியத்தைச் செய்கிறார்கள். தயை நிறைந்த உள்ளத்தின் தயையும் கடினச் சித்தத்தின் கொடூரமும் சேர்ந்து போர் என்ற

யந்திரம் உருவாகிறது. ஆகவே இவை இரண்டும் போரின் பகுதிகளே. சாஸ்திரீய பாஷையில் இதையே கூறுவோமானல் நாம் போரை ஏற்றுக் கொள்ளும் வரையில், நாம் போரில் காயமுற்றவருக்குப் பணிவிடை புரியினும் சரி, சிப்பாயாகவே யிருந்து போரிடினும் சரி, இவ்விரு நிலைகளிலும் நாம் செய்வது பாபமே. நாம் தயையினல் தூண்டப்பட்டு ஏதோ ஒன்றைச் செய்வதனல் நாம் தயையின் ஆட்சியை அமைத்துவிட முடியுமென்று சொல்வதற்கில்லை. தயைச் செயலை அல்ல, தயையின் ஆட்சியை நாம் அமைக்கவேண்டும். உணவுப்பண்டங்களில் உப்பைச் சேர்ப்பதனல் அவைகளுக்கு ருசி ஏற்படுவதைப்போல, காயமுற்ற சிப்பாய்களுக்குச் செய்யும் சேவை என்ற தயைப்பணியினல் போர் கவர்ச்சியுள்ளதாக, ருசியுள்ளதாக ஆகிறது. இந்த தயைப் பணியினல் யுத்தத்தை ஒழிப்பதென்பது முடியாது. நாம் இத்தகைய தயைப் பணிகளை ஏற்று கடூரமான அரசாங்க வேலையில் தயையின் அம்சத்தைப் புகுத்துவதின் மூலமாகவே நம் கடமையைச் செய்தவர்களாகமாட்டோம். ஆகையால் எவை தயைப் பணிகளென்றும் நிர்மாண வேலைகளென்றும் தோன்றுகின்றனவோ அவைகளை தயைபுரியும் நோக்கத்தினலும் நிர்மாண வேலையிலுள்ள ஆசையினலும் பரந்த நோக்கமில்லாமல் ஏற்றுச் செய்வோமானல், நம்மால் ஏதோ சேவை செய்ய முடியுமென்பது உண்மை; ஆயினும், நாம் எதை நம் கடமை என்று மதித்திருக்கிறேமோ, உலகம் நம்மிடம் எதை எதிர்பார்த்து நிற்கிறதோ அதிலிருந்து தவறியவர்களாவோம்.

ஜனசக்தி நிர்மாணமே நம் கடமை

"உங்களுக்கு அரசாங்கத்தினிடமும் செல்வாக்கிருப்பதாகத் தெரிகிறதே, நீங்கள் ஏன் அதைப் பயன்படுத்தி நஷ்டஈடு கொடாமலே நிலங்களை ஏற்று நிலமில்லாதவர்களுக்கு அவற்றை விநியோகிப்பதற்காக ஒரு சட்டம் இயற்றச் செய்யக்கூடாது?" என்று என்னைப் பலரும்

கேட்கிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்வது: "நான் சட்டம் வருவதாயிருந்தால் குறுக்கே நிற்கவில்லை. சட்டத்தைப் பார்க்கிலும் இன்னும் ஒரு அடி முன்னே போகிறேன். நீங்கள் விரும்பும் வழியில் நான் செல்வதானால் என் வழியில் எனக்குப் பூரண வெற்றி ஏற்படவில்லையென்றே ஆகும். பூரண வெற்றியில்லை, முக்கால் பங்குமில்லை, அரைப்பங்கே வெற்றி கிடைத்தபோதிலும் அதனால் சட்டம் தோன்றுவதற்கு அனுகூலமான சூழ்நிலையே ஏற்படும்." நான் சட்டத்திற்குக் குறுக்கே நிற்கவில்லை என்பது ஒருபுறமிருக்க அது வருவதற்கு உதவியே செய்து கொண்டிருக்கிறேன். இன்னும் ஓரடி முன் எடுத்து வைத்து, சட்டம் இல்லையேல் இது நடைபெறாதென்று நான் சொல்லிக்கொண்டேயிருப்பேனானால் என் கடமையில் தவறியவனாவேன்; சட்டத்தின் உதவி இல்லாமலே பூமியைப் பாகுபாடு செய்து கொள்வதற்கு அநுகூலமாக மக்களின் மனத்தை நான் உருவாக்குவதே என் கடமையென்று உணருகிறேன். சட்டத்திற்குப் பயந்தா தாய்மார்கள் தம் குழந்தைகளுக்குப் பாலூட்டுகிறார்கள்? மனிதனுடைய உள்ளத்திலுள்ள ஏதோ ஒரு சக்தியினாலேயே அவன் வாழ்க்கை செழித்திருந்து வருகிறது. மனிதன் அன்பை நம்பியிருக்கிறான், அன்பிலேயே தோன்றுகிறான், அன்பிலேயே வளர்கிறான். உலகத்தை விட்டுப் போகும்பொழுதும் அன்பர்கள் அவனைச் சூழ இருந்தார்களானால் ஆனந்தமாக உடலைத் துறக்கிறான். ஆகவே அன்பிற்குள்ள இவ்வளவு சக்தியையும் அறிந்திருந்தும் நான் சட்டம் சட்டமென்று உருப்போட்டுக்கொண்டேயிருப்பேனானால் ஜனசக்தி உருவாக்கப்படுவதின் மூலமாக நம்மிடமிருந்து எந்த உதவியை அரசாங்கம் எதிர்பார்க்கிறதோ அது அதற்குக் கிட்டாமற் போய்விடும். ஆகையால், தண்டசக்தியிலிருந்து வேறுபட்ட ஜனசக்தியை நான் உருவாக்க விரும்புகிறேன். அதையே நாம் செய்தாக வேண்டும். நான் உருவாக்க விரும்பும் இந்த ஜன

சக்தி தண்ட சக்திக்கு எதிரானது என்று சொல்ல மாட்டேன். ஜனசக்திக்கு எதிரி ஹிம்சையே.

சர்க்கார் கதர் போர்டும் சர்க்கா சங்கமும்

தற்சமயம் கதர்போர்டு அமைக்கப்பட்டு வருகிறது. அரசாங்கம் உதவ விரும்புகிறது. பண்டித நேரு, "நான்கு வருஷங்களுக்கு முன்பே செய்திருக்க வேண்டிய காரியம் இவ்வளவு காலம் கழித்துச் செய்யப்படுவதைக் கண்டு நான் ஆச்சரியப்படுகிறேன்" என்றார். அவர் ஒரு மகான். அவருடைய உள்ளம் மிகவும் பெரியது. உள்ளச் சோதனையின் விளைவாக தன் உள்ளக்கிடக்கையை அவர் இவ்வாறு வெளியிட்டிருக்கிறார். இப்பொழுது அரசாங்கம் கதரைப் பரப்பவும் கதர் உற்பத்தியைப் பெருக்கவும் விரும்புகிறதாகையால் அதற்கு உதவி செய்தல் நம் கடமையும் சர்க்கா சங்கத்தின் கடமையுமாகும். சங்கத்தினிடம் ஏற்கெனவே அனுபவமிருக்கிறது. ஆயினும் ஒரு பிரஜை என்ற முறையில், அனுபவமுள்ள தொழில் கைவந்தவர் என்ற வகையில் சாதாரணமாக நம்மால் முடிந்த உதவியை நாம் செய்ய வேண்டுமேயன்றி, அதன் மூலமாக நமக்கே அழிவு ஏற்படுவதாயிருந்தால் நம்மிடமிருந்து எதிர்பார்க்கப்படும் உதவி கிடைத்ததாகாது. நாம் கதரின் நோக்கத்தைத் தெளிவாகவும் தூயதாகவும் வைத்துக்கொண்டு அரசாங்கத்திற்கு, கதர் உற்பத்திக்கு அது நம்மிடம் கோரும் உதவியைச் செய்துவர வேண்டும். போரை அகற்றுவதற்கு வேண்டிய காரியங்களை நாம் செய்யவேண்டும்; அவ்வாறு செய்தும் போர் மூண்டு நடக்குமானால், போரில் காயமுற்ற சிப்பாய்களுக்கு நம்மால் முடிந்த உதவியை, சேவையைச் செய்ய வேண்டும். ஆனால் போரை அகற்றுவதே நம் முக்கியமான வேலை, சிப்பாய்களுக்குச் சேவை செய்வதல்ல என்பதை நாம் மறத்தல் கூடாது. நம் கதர் வேலையின் நோக்கம் கிராம ராஜ்யத்தின் சக்தியை வளர்ப்பதாகும். பண்டித நேரு என்னிடம் வந்து பேரன்புடன் பேசினார். அளவளாவிக்கொண்டிருந்த பிறகு நான் என்

கருத்தைத் தெரிவித்தேன். அரசாங்கத்தினிடமிருந்து கிராமக் கைத்தொழில்களுக்கு, கதருக்கு எதிர்பார்க்கும் உதவி, அரசாங்கம் எவ்வாறு ஒவ்வொரு பிரஜைக்கும் எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டுமென்றும், அவ்வாறு தெரிந்திருக்கும்படிச் செய்வது அரசாங்கத்தின் கடமை என்றும், அவ்வாறு செய்யும் பொறுப்பை அரசாங்கம் ஏற்று அதைப் பூர்த்திசெய்ய முடியாமலிருக்கும் வரையில் தான் செய்யவேண்டியதை செய்ய முடியவில்லையே யென்றும் அது எப்படி உணருகிறதோ அவ்வாறே இந்தியப் பிரஜை, இந்திய கிராமவாசி ஒவ்வொருவனுக்கும், ஒவ்வொருவளுக்கும் நூற்கக் கற்றுக் கொடுப்பதும் தன் கடமையே என்று அது உணரவேண்டும். நூற்கத் தெரியாத பிரஜை எழுத்து வாசனை தெரியாதவனைப் போன்றே மதிக்கப்படவேண்டும். நாங்கள் இதற்காக அரசாங்கத்தினிடமிருந்து பொருளுதவி கோரவில்லை. மேலே கூறிய கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுவிடுமானால் அதிலிருந்து எங்களுக்கு மிகுந்த உதவி ஏற்படும் என்றெல்லாம் சொன்னேன். இவைகளை யெல்லாம் அவர் கவனமாகக் கேட்டார். அவருள்ளத்தில் நான் சொன்னது பதிந்தது என்றே நினைக்கிறேன். ஆனால் பிறகு அவர் சாதாரணமாக, வேடிக்கையாக, எல்லோருக்கும் நூற்கக் கற்றுக் கொடுத்து விட்டோமானால் நூற்ற நூலின் உபயோகத்தைப் பற்றிய கேள்வி எழுமே என்றார். அதற்கு நான் எல்லோரும் படிக்கவேண்டுமென்கிறோமே, படிப்பின் உபயோகத்தைப் பற்றியும் இதே வகைக் கேள்வி உண்டல்லவா என்றேன். நான்கு, ஐந்து வருஷம் கல்லூரியில் சேர்ந்து உயர்ந்த படிப்புப் படித்த எத்தனையோ பேர் எல்லாவற்றையும் மறந்துபோய் எழுத்து வாசனையே இல்லாதவர்களைவிட மோசமாய்ப் போயிருப்பதைப் பார்த்திருக்கிறேன். யோக க்ஷேமம் என்று சொல்லப்படுவது நமக்குத் தெரியும். யோகத்துடன் க்ஷேமமும், பயிற்சியுடன் அதனால் விளையும் பயனும் இணைந்தேயிருக்கின்றன.

கதருக்காக நான் கோரியது இவ்வளவுதான் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். இது மக்களின் அரசாங்கம், மக்களின் கோரிக்கையை நிறைவேற்றுவது அரசாங்கத்தின் வேலையாகும். ஆனால் சட்டத்தின் உதவி கொண்டு கதரை மக்கள் மீது சுமத்தவேண்டுமென்று கோருவேனானால் நான் கடமையைச் செய்யவேண்டிய வேலையை உணரவில்லை என்றே ஆகும். ஜனசக்தி தண்ட சக்தியிலிருந்து வேறுபட்டது என்ற தத்துவத்தை நான் மறந்துவிட்டதாகவே அப்பொழுது கருதப்படும்.

நம் வேலை முறை

கதர், பூமிதானம் ஆகிய இரண்டையும் உதாரணமாகச் சொன்னேன். அரசாங்கம் அளிக்கும் இத்தகைய உதவியினால் செல்வப் பெருக்கு ஒருக்கால் ஏற்பட்ட போதிலும் ஜனசக்தி உருவாகமாட்டாது. செல்வத்தைப் பெருக்குவது மட்டும் நம் நோக்கமல்ல, ஜனசக்தியை உருவாக்குவதுமாகும். நாம் செய்யும் வேலையில் இந்த நோக்கம் நமக்கிருக்குமானால் நம் வேலைமுறை எவ்வாறு இருக்கவேண்டுமென்பதை ஆலோசிப்போம். ஒவ்வொரு வேலையிலும் நமக்கே உரியதென்று சொல்லத்தக்க ஒரு முறை உண்டு. அம்முறையை அனுசரிப்பதனால் லோக சக்தி உருப்பெறும்; மக்களுக்கு தண்ட சக்தியின் உதவியின்றியே தம் காரியங்களைச் செய்துகொண்டு போவதற்குத் திறமை ஏற்படும். இவ்வாறு சிந்திப்போமானால் நம் முறையில் உள்ள ஒரு அம்சம் கருத்தாட்சியாயிருக்க, இரண்டாவதோ செயல் பாகுபாடாகிறதென்பது தெரிய வரும். கலைச் சொற்கள் அமைப்பதற்குள்ள என் இந்தப் பழக்கத்தை நீங்கள் மன்னிக்க வேண்டும்.

கருத்துப் புரட்சி

கருத்தாட்சி என்றால் கருத்தைத் தான் புரிந்துகொள்ளுதலும் பிறருக்கு அறிவுறுத்துதலுமாகும். கருத்தைப் புரிந்துகொள்ளாமல் நாம் எந்த விஷயத்தையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது. பிறர் ஒரு விஷயத்தில் அடங்கியுள்ள கருத்தைப் புரிந்துகொள்ளாமலே அதை ஏற்பார்களானால் நாம் அவர்களின் போக்கிற்காக வருந்தவேண்டும். நாம் நம் விருப்பத்தைப் பிறருக்கு விளக்கிக் கூறுவதோடு திருப்தியுறவேண்டுமே அல்லாது அவர்கள் மீது அதைச் சுமத்தக் கூடாது. சர்வோதய சமாஜத்திற்கென நாம் வகுத்துள்ள திட்டத்தை, அதன் அமைப்பைச் சிலர் 'loose' அல்லது திட்டவட்டமா யில்லாதது என்று கூறுகிறார்கள். அமைப்பை, உருவை நாம் செம்மையாகச் செய்யாவிட்டால் வேலை எதுவும் நடைபெறாது. இதனால் அமைப்பு செம்மையற்றதாக இருத்தலாகாது. அதை அமைப்பு என்று அழையாது அமைப்பின்மை என்றே அழைக்கலாம். அதாவது நாம் அப்பொழுது கருத்தொன்றையே கொண்டு நிற்கிறோம் என்றாகிறது. எவருக்கும் நாம் ஒரு விஷயத்தைப் புரிந்துகொள்ளாமல் எதையும் செய்யும்படி ஏவல் பிறப்பிப்பதில்லை. நாம் செய்வதெல்லாம் வெறும் ஆலோசனையே. குரானில் பக்தர்களின் இலக்ஷணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அதில் ஆலோசனைகளின் மூலமாக ஆட்சியை நடத்துவோமென்று சொல்லப்பட்டிருக்கிறது. நாம் கருத்தை விளக்கிக் கூறுவதன் மூலமாக அதை அமுலுக்குக் கொண்டு வருவோமானால் எனக்கு மகிழ்ச்சி உண்டாகும். விஷயத்தைப் புரிந்துகொள்ளாமல் எதையும் செய்விப்பதைப் பார்க்க எனக்கு வருத்தமுண்டாகிறது. இதில் காணப்படும் தென்பு வேறெந்த அதிகாரத்திற்குட்பட்ட கட்டுப்பாட்டுடன் அமைந்த

அமைப்பிலும் எனக்குத் தென்படுவதில்லை. அதில் சக்தி என்னவோ காணப்பட்ட போதிலும் சுபகரமான அறிவின் சேர்க்கை இருப்பதில்லை. நாம் விரும்புவது அந்த அறிவின் சேர்க்கையையே. ஆகையால் கருத்தாட்சியை நாம் ஏற்கவேண்டும். இது நமக்குப் புரியுமானல் கருத்துக்களை இடையருது பிரசாரம் செய்துகொண்டிருப்பதே நமது வேலை என்பதும் புலனாகும். இவ்வகையில் நான் சிந்திக்கும் பொழுது புத்த பகவான் பிக்ஷு சங்கம் அமைத்ததிலும் சங்கராச்சாரியர் துறவிகளின் சங்கம் அமைத்ததிலும் அடங்கியுள்ள ரகசியம் எனக்குப் புலனாகிறது. ஆனல் அத்தகைய சங்கங்களை நாம் அமைக்க விரும்பவில்லை. ஏனெனில் அவைகளினல் விளையும் நன்மைகளை விடத் தீமைகளே அதிகமாயிருக்கின்றன. ஆகையால் நாம் சங்கங்கள் அமைக்காமலே அவர்கள் சங்கம் அமைத்ததன் காரணத்தைப் புரிந்துகொண்டால் போதுமானது. மலையிலிருந்து விழும் நீர் அருவிபோல சதா சுற்றிக்கொண்டு மக்களை அணுகி இடையருது விஷயங்களை விளக்கிக் கூறிக்கொண்டேயிருப்பவர்கள் தேவை. ஒரு முறை எடுத்துக் கூறும்பொழுது மக்கள் அதைப் புரிந்துகொள்ளவில்லை என்றால் மறுமுறை கூறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது என்ற காரணத்திற்காக மகிழ்ச்சி கொள்ளவேண்டும். கருத்துக்களைப் பரப்புவதில் இவ்வளவு உற்சாகமும், சிரத்தையும், உறுதியும் நமக்கிருக்கவேண்டும். ஆனல் நாமோ வெவ்வேறு ஸ்தாபனங்களில் சிக்கிக்கொண்டுவிட்டோம். அந்த ஸ்தாபனங்கள் பெருமை பொருந்தியவையாய் இருந்தபோதிலும் நமக்கு அவைகளிடம் பக்தியிருக்கவேண்டுமேயல்லாது பாசம் கூடாது. அதன் காரியங்களைச் செய்துகொண்டிருக்க வேண்டியது தான். ஆனல் சிலர் சுற்றிக்கொண்டும் வேலை செய்துகொண்டுமிருக்கவேண்டும். இத்தகைய அமைப்பை நாம் உருவாக்காவிட்டால் கருத்து வறண்டுபோக, கருத்தாட்சி ஏற்படாமற் போய்விடும்; வேறு எந்த ஆட்சியையும் நாம் அமைக்க விரும்பவில்லை.

வேலைசெய்ய எல்லோரும் முன்வாருங்கள்

பீஹார் மக்கள் தங்கள் மாகாண காங்கிரஸ் பூமி தானப் பணியை முழு மனதுடன் ஏற்று சிறப்பாகச் செய்துவருகிறதென்று பெருமைப்படுகிறார்கள். இவ்வாறு பெருமை கொள்ள அவர்களுக்கு உரிமையுண்டு. ஆனால் நடப்பதென்ன? மேலிடத்திலிருந்து 'பூமிதான இயக்கத்தில் கலந்துகொள்வது காங்கிரஸ்காரர்களின் கடமையாகுமென்று' சுற்றறிக்கை போகிறது. கங்கை இமயமலையிலிருந்து கிளம்பியவுடனே அது தான் கிளம்பிவிட்டதாக அறிக்கை ஒன்றை மாகாணக் கமிட்டிகளுக்கு அனுப்பியது போல் ஆகும் இது. கங்கை ஹரித்துவாரத்தைத் தாண்டி முக்தேஸ்வரத்திற்கு வருவதைப்போல, மாகாணக் கமிட்டிகளிலிருந்து ஜில்லா கமிட்டிகளுக்கு அதே வகையான சுற்றறிக்கை போகிறது. ஆகவே ஒரு சுற்றறிக்கையிலிருந்து மற்றொரு சுற்றறிக்கையென பல சுற்றறிக்கைகள் பரவுகின்றன. நான் வேடிக்கையாகச் சொல்வதுண்டு: இனம் தன் இனத்தையேதான் உற்பத்தி செய்யும்; அதைப் போல சுற்றறிக்கைகளிலிருந்து இன்னும் பல சுற்றறிக்கைகள், அவற்றிலிருந்து இன்னும் பல என்று இவ்வாறு போய்க்கொண்டேயிருந்தால் வேலையை யார் செய்வார்கள்? அறிக்கைகளின் அமல் ஆபீஸோடு சரி; நாம் கிராமங்களில் போய்ச் செய்யவேண்டுவது வேலையே. இந்த வேலை நாம் வீடுவீடாக நுழைந்து புறப்படாத வரையில் நடைபெறாது. ஆனால் நாம் கிராமங்களுக்கெல்லாம் போவதற்கு நமக்கு முக்கிய சாதனமாய் உதவக்கூடியது கருத்துப் பிரசாரமொன்றே. ஆகவே அதற்கான திட்டத்தை நாம் வகுக்கவேண்டும்.

கருத்துப் பிரசாரம்

நமக்குத் துணிவில்லை. ஆகையால் சட்டம் இயற்றுதல் போன்ற குறுக்குப் பாதையை விரும்புகிறோம். சட்டம் வரட்டும், கட்டாயம் வரட்டும், நல்ல உருவில் விரைவில் வரட்டுமென்று இவ்வகையில் நாம் முயன்றுகொண்

டிருப்போமானல் அது நாம் பரதர்மத்தை அனுஷ்டித்த தாகுமே அல்லாது சுதர்மத்தைச் செய்ததாகாது. நாம் செய்ய வேண்டியது கருத்துப் பிரசாரமே. கருத்துப் பிரசாரத்தின் மூலமாகவே நம் வேலை நிறைவேறும்.

கிராமத்தில் செயல் பாகுபாடு

இரண்டாவது சாதனம், கருவி, செயல் பாகுபாடா கும். செயல் திறமை அனைத்தும் ஒரே இடத்தில் குவிந் திருக்கக்கூடாது. அது எல்லா கிராமங்களிலும் பரவியதா யிருக்கவேண்டும். ஆகையால் ஒவ்வொரு கிராமத்திற்கும் எந்தெந்தப் பண்டங்கள் வெளியிலிருந்து அங்கே வரலாம், எவை வரக்கூடாது என்பதைத் தீர்மானிக்கும் உரிமை அந் தந்த கிராம மக்களிடமே இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். நாம் இவ்வாறு சொல்லும்பொழுது அர சாங்க அதிகாரிகள் "இது ஒரு அரசாங்கத்திற்குள்ளேயே பிறிதொரு அரசாங்கம் தோன்றுவதாகவல்லவா ஆகிறது, அது சரியல்லவே" என்று ஆக்ஷேபிக்கிறார்கள். ஆனல் செயல் பாகுபாட்டை நாம் செய்யவில்லையானல் படை பலம் தவிர்க்க முடியாததாய்விடும். அங்ஙிலையில் நாங்கள் படை பலத்தை விரும்பவில்லை, படைபலத்தையே அகற்ற விரும்புகிறோமென்று சொல்லாதீர்கள். ஆண்டவன் கூட அறிவைப் பகுத்துப் பாகுபாடு செய்து பலருக்கும் வழங்கியிருக்கிறான். ஏற்றத்தாழ்வாயிருந்த போதிலும், அறிவை என்னவோ அவன் அனைவருக்கும் வழங்கியிருப் பதால், உலகம் செவ்வனே நடந்துகொண்டுபோக. ஆண்டவனென்று ஒருவன் இருக்கிறானா என்றுகூட சிலர் கேட்குமளவுக்கு அவன் ஆனந்தமாகத் தூங்கிக்கொண் டிருக்கிறான். அதே வகையில் நாமும் இந்த இந்தியா ஒரு ராஜ்யமா, இங்கும் ஆட்சி நடைபெறுகிறதாவென்று பிறர் ஐயுறும் வகையில் நம் ஆட்சியை அமைக்கவேண்டும். நாமென்னவோ கிராம் ராஜ்யம் அமைப்பதாகப் பிரகடனம் செய்கிறோம். கிராம மக்களே தம் கையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்த வேண்டுமென்று விரும்பு

கிறோம். கிராம மக்கள் நிமிர்ந்து நின்று, "குறிப்பிட்ட ஒரு பொருள் எங்கள் கிராமத்திற்குள் வரக்கூடாது, நாங்கள் சொல்லுவதை மீறி அது வருமானால் அதை நாங்கள் எதிர்க்கவேண்டியிருக்கும்" என்று அரசாங்கத்தினிடம் சொல்லக்கூடிய நிலை ஏற்படும்பொழுது அதனால் அரசாங்கத்திற்கு உதவியே ஏற்படும்; அதனால் படைபலம் குறையும். அப்பொழுது எல்லா கிராமங்களிலும் சீரமைப்பும் நிர்வாகமும் ஒரே இடத்திலிருந்து நடைபெறுமற்போய் அந்தந்த கிராமங்களிலிருந்தே நடைபெறும். ஆகையால் தேசீய சீரமைப்புத் திட்டம் குவியல் முறையில் அமையாமல், கிராமச் சீரமைப்புத் திட்டம் தோன்றும். தேசீயச் சீரமைப்பு என்பதற்கு கிராமச் சீரமைப்பு என்ற பொருளே கொள்ளப்பட வேண்டும்; கிராமச் சீரமைப்பிற்கு உதவியளிப்பது மத்திய அரசாங்கத்தின் வேலையாகும். இதுவே நாம் செய்ய விரும்பும் இரண்டாவது காரியமான செயல் பாகுபாடென்பது. நாம் இதே திசையில்தான், வகையில்தான் எல்லாம் செய்ய விரும்புகிறோம். நிலப்பாகுபாட்டைப் பற்றிப் பேச்செழும் போதெல்லாம் நிலத்தைக் கூறு போடுவதற்கு ஒரு அதிகபக்ஷ எல்லையை ஏற்படுத்திக்கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார்கள். பூமிதான யக்ஞம் காரணமாக தகுந்த சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. மேல் வரம்பை நிர்ணயிப்பதற்கு முன் அடித்தளத்தை அமைத்துக்கொள்ளுங்களென்று நான் சொல்லுகிறேன். நான் இவ்வாறு சொல்வதற்குக் காரணம் செயல் பாகுபாட்டை விரும்புவதே. தொழிலாளிகள் வேலை என்னவோ செய்தபோதிலும் அவர்களுக்கு தாம் வேலை செய்கிறோமென்ற பொறுப்புணர்ச்சி இருப்பதில்லை. வண்டி ஓடிக்கொண்டிருந்த போதிலும் அது உயிரற்றதாகையால் நாம் வண்டி ஓடுவதாகச் சொல்லுவதில்லை. தொழிலாளிகள் தம் கைகளினால் செய்யும் வேலையை அறிவுடனும் உள்ளத்துடனும் செய்யவேண்டுமென்பதே நம் விருப்பம்.

இந்திய விவசாயிகளுக்கு அறிவில்லை என்று சொல்லு கிறார்கள். அவர்களிடமுள்ள அறிவை நாம் அறிவென்று கொள்ளவில்லை என்றால் அவர்களிடம், நம்மிடம் அதைத் தவிர வேறு அறிவில்லை என்றே நான் சொல்லுவேன். ஆனால் நம் நாட்டிலுள்ள அறிவு அனைத்தையும் நாம் பயன்படுத்தாமல் போவோமானால் அதனால் நாட்டிற்குப் பெருநஷ்டமே ஏற்படும். ஆகவே மக்களின் அறிவை வளர்க்கக்கூடிய கல்விக்கும் நாம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

நம் வேலையிலுள்ள முக்கியமான அம்சங்களையும் அதன் அடிப்படையாயுள்ள கருத்துக்களையும், அதாவது நம் வேலை முறை, செயல் பாகுபாடு, வேலைத் திட்டம் ஆகியவை என்னென்னவென்று இதுவரையில் சொன்னேன்.

சர்வ சேவா சங்கம்

இனி வேலையை நடத்துவதற்குரிய ஸ்தாபனத்தைப் பற்றி, செயல் முறையைப்பற்றிச் சொல்லுகிறேன். ஸ்தாபன வகையிலோ நாம் சர்வ சேவா சங்கம் என்ற ஒன்றையும் ஸர்வோதய சமாஜம் என்ற மற்றொன்றையும் தோற்றுவித்திருக்கிறோம். ஸர்வோதய சமாஜத்தின் பெயரும் சர்வ சேவா சங்கத்தின் வேலையும் விளங்க வேண்டும். இவை இரண்டும் சேர்ந்து வேலைகளை நடத்தி வரும். சர்வ சேவா சங்கம் பலமற்ற ஸ்தாபனமாயில்லா மல் நல்ல வலுவுள்ளதாயிருக்கும். ஸர்வோதய சமாஜமும் வலுவற்றதாயிருப்பதற்குமாறாக, சட்ட திட்டங்களில்லாத, சிந்தனை மட்டும் புரிந்துவரும் வழிதுலக்கும் பணியைச் செய்யும் ஸ்தாபனமாக இருக்கும். அது சிந்தனையில் தேர்ச்சியுள்ளதாக ஆவதெப்படி என்பதை நாம் ஆலோசித்து அதற்குத் தேவையானவற்றைச் செய்யவேண்டும். அது கருத்தாட்சியை, தத்துவ ஆட்சியை ஒப்பி இயங்கி வரும். அது கட்டுத் திட்டங்களுக்கு அடங்கியிருக்க

வேண்டுமென்று எண்ணுது கருத்தாட்சிக்கு அடங்கியிருக்கும்படி செய்வதிலேயே நாம் கருத்தாயிருக்க வேண்டும். சர்வ சேவா சங்கத்தில் அடங்கியுள்ள எல்லா ஸ்தாபனங்களிடையிலும் கருத்தொருமை அல்லது கருத்துப் பொருத்தம் ஏற்படுத்துவதற்கு நாம் முயல வேண்டியதோடு, பொதுமக்களிடையே தத்துவப் பிரசாரம் நடத்த வேண்டும்; அதற்கெனப் புத்தகங்களும் பத்திரிகைகளும் வெளியிடுவதோடு ஆங்காங்கு வகுப்புக்களும் நடத்தப்பட வேண்டும்; அந்த வகுப்புக்களில் ஒருபுறம் நம் தத்துவங்களின் ஆராய்ச்சியும் மறுபுறம் நம் தத்துவங்களை இத்துடன் முரண்படும் பிற தத்துவங்களுடன் ஒப்பு நோக்கலும் நடந்து வரவேண்டும். ஆனல் இன்று நாம் இதைச் செய்யவில்லை. இதைச் செய்யவில்லேயேல் மக்கள் நம்மிடம் எதிர்பார்ப்பதை நம்மால் நிறைவேற்றி வைக்க முடியாது. இதுவரையில் இருந்துவந்ததைப்போல் பல்வேறு ஸ்தாபனங்களாக இனிமேல் இருந்துவருவது சாத்தியமில்லை.

சில உதாரணங்களின் மூலமாக நான் இதை விளக்குகிறேன். நான் இதில் யாரையும் குறை கூறுவதாக எண்ணவேண்டாம். என் குறைபாடுகளையே நான் வெளியிடுவதாக எண்ணிக்கொள்ளுங்கள். வர்தாவில் ஹிந்துஸ்தானி பிரசார சமிதி இருக்கிறது. அங்கே என்ன நடந்து வருமென்று நினைக்கிறீர்கள்? மாணவர்கள் வந்துகொண்டிருப்பார்கள், படித்துக் கொண்டிருப்பார்கள். ஏற்கெனவே இருந்ததை விட இப்பொழுது மாணவர்களின் தொகை குறைவாயிருக்கும். ஏனெனில் அங்கே உருது, நாகரி ஆகிய இரு லிபிகளும் கற்கவேண்டியிருக்கிறது. அதற்கனுகூலமான சூழ்நிலை தற்சமயமில்லை. ஆயினும் அங்கே வரும் மாணவர்கள் இரு லிபிகளையும் பயிலுதல் தம் கடமை என்று கருதுகிறுர்கள். நம் சமாஜம் கருத்தொருமை உள்ளதாயிருக்குமானல் நான் அங்கே வரும் மாணவர்களுக்கு 4 மணி நேர விவசாயமும், பிறகு ஒரு மணி நூற்பும், ஒரு மணி சமையல் வேலைகளும் கொடுத்து

விட்டு ஒன்றிரண்டு மணி நேரம் லிபிகள் கற்கும்படிச் சொல்லுவேன். ஆனால் இன்று ஸ்தாபனங்கள் நடந்து வரும் முறையினால் சக்தி உருவாவது சாத்தியமில்லை. இவைகளில் இரண்டு லிபிகளைக் கற்கக்கூடிய மாணவர்கள் உருவாவார்களே யன்றி அவர்களிடம் சக்தி யிராது. துண்டு துண்டாய் ஸ்தாபனங்களை வைத்திருப்பதனால் வேலை ஒன்றும் நடைபெறாது. நீங்கள் காதுகளினால்தானே கேட்கிறீர்கள், நான் நாவினால்தானே பேசுகிறேன் என்பதற்காக உங்கள் காதுகளையும் என் நாவையும் அறுத்து இங்கே வைத்துவிட்டால் என்னால் பேசவும் முடியாது, உங்களால் கேட்கவும் முடியாது. எனக்கும் உங்களுக்கும் அவயவங்கள் பூரணமாய் அமைந்திருப்பதாலேயே நான் பேசுவதும் நீங்கள் கேட்பதும் சாத்தியமாயிருக்கிறது. வெளி வாழ்க்கையின் அம்சம் அதில் சேரும்பொழுதுதான் அதில் பூரணத்துவம் ஏற்படும். அப்பொழுதுதான் அங்கங்கே கற்கப்படும் உருதுவும் நாகரியும் தென்புள்ளதாயிருக்கும். இன்று நம் ஸ்தாபனங்களில் சக்தியில்லாதிருப்பதற்கு, அவற்றின் மூலமாக ஜனசக்தியும் புரட்சியும் உருவாகாமலிருப்பதற்குக் காரணம் நம் சங்கங்கள் தனித்தனியாக வேலை செய்து வருவதேயாகும். தனித் தனியாக இருந்து வருவதில் நமக்குப் பெருத்த மோசம் ஏற்பட்டு விட்டது. ஆனால் நாம் ஒன்றாக இணைந்தபின்னரே நமக்கு ஒருமையும் ஒருமை நோக்கமும் ஏற்பட்டு நம் குறைபாடுகள் நீங்கும். ஒவ்வொரு திட்டத்திலும் நல்ல அம்சங்களும் இருக்கும், குறைபாடுகளும் இருக்குமென்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நம் ஸ்தாபனங்களைப் பற்றிய வரையில் எல்லா அம்சங்களையும் கவனித்துப் பார்க்கையில் அவற்றில் சக்திக்குப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதாகவே தோன்றுகிறது. சர்வ சேவா சங்கத்தில் எல்லா ஸ்தாபனங்களையும் இணைத்து இயங்கச் செய்யாத வரையில் அதில் சக்தி தோன்றுவது அரிதாகவே யிருக்கும்.

67916

பூமிதான யக்ஞம்

நாம் ஆரம்பித்திருக்கும் பூதான யக்ஞ வேலையைப் பற்றி இப்பொழுது சொல்லுகிறேன். இந்த பூதானப் பணியையே நான் இப்பொழுது செய்து கொண்டிருக்கிறேன். நான் இப்பொழுதெல்லாம் பேசுவதும் இதைப் பற்றியே. குறைந்த பக்ஷம் ஐந்து கோடி ஏக்கர் நிலத்தை ஒரு புறம் பெற்று மறுபுறத்தில் விநியோகிக்க விரும்புகிறோம். மேலும் இந்த வேலை 1957க்குள் முடிந்தாக



வேண்டும். இதில் நாம் அனைவரும் முனைவோமானால் இது முடிவுறும். நாம் அனைவரும் என்று நான் சொல்லுவது ஸர்வோதயக்காரர்கள் என்று சொல்லப்படும் என்னையும் உங்களையும் மட்டுமல்ல, இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்கிற காங்கிரஸ்காரர்கள், சோஷலிஸ்டுகள் ஆகியவரையு

மாகும். அவர்கள் அனைவரும் இவ்வேலையில் முனைந்து விடவேண்டும். எல்லோரும் முனைவார்களானால் இந்தப் பிரசினையை நாம் தீர்த்து விடுவோம். சட்டத்தின் உதவி யில்லாமலே தீர்ந்துபோனாலும் போகலாம். அதாவது, முழுமையும் ஜனசக்தியினாலேயோ அல்லது முக்கால் பங்கு அல்லது அரைப் பங்கு ஜனசக்தியும் எஞ்சியதற்கு சட்ட உதவியும்கொண்டே இதை நிறைவேற்றிவிடலாம். எந்த வகையில் நடந்தபோதிலும், முக்கியமாக ஜனசக்தி கொண்டே நடத்தவேண்டும். முழுமையும் ஜனசக்தியே இதை நிறைவேற்றிவிடுமானால் நான் ஆனந்தக் கூத்தாடு வேன். பெரும் பகுதி ஜனசக்தியினால் நிறைவேறினாலும் எனக்கு திருப்தியே உண்டாகும். நாம் இவ்வளவு செய்து விடக் கூடுமானால் 1957ம் வருஷம் நடைபெற விருக்கும் தேர்தல் கட்சி - பிரதி கட்சிகளுக்கிடையில் நடைபெறாது. அந்தத் தேர்தல் நல்லோர், பெரியோர் மலிந்துள்ள கட்சி களுக்கிடையே நடைபெறும். இன்றோ இந்தக் கட்சி யிலும் நல்லவர்கள் இருக்கிறார்கள், அந்தக் கட்சியிலுமிருக் கிறார்கள். இது பீஷ்மருக்கும் அர்ஜுனனுக்குமிடை யில் யுத்தம் நடைபெறுவது போன்று இருக்கிறது. நாம் விரும்புவது பீஷ்ம-அர்ஜுன யுத்தமல்ல, ராம-ராவண யுத் தமே. இன்றோ எல்லாக் கட்சிகளிலுமே நல்லவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் ஏன் ஒன்று சேர்ந்து விடக்கூடாது? அவர்களுக்கு தாம் முனைந்து செய்யக் கூடிய வேலைத் திட்டமொன்று ஏற்படுமானால் அவர்கள் கருத்து வேற்றுமைகளை மறந்து அதில் ஈடுபடுவார்கள். நம் வேலைத் திட்டம் அத்தகையதொன்றே ஏனெனில் இது அடிப்படை வேலையாகும். சோஷலிஸ்டுகள் என்னிடம், "நீங்கள் எங்கள் வேலையையே செய்ய ஆரம்பித்துவிட்டீர் களே" என்று சொல்லுகிறார்கள். நான் "ஆம். ஆகை யால் நீங்கள் தயவு செய்து எனக்குக் கை கொடுங்கள்" என்று அவர்களுக்கு பதில் சொல்லுகிறேன். காங்கிரஸ் காரர்களும் "இது மிகவும் நல்ல வேலையாயிருக்கிறது, நாங் களும் இதைச் செய்ய வேண்டும்" என்கிறார்கள். நான்

அவர்கள் உதவியையும் நாடுகிறேன். ஜனசங்கக்காரர்கள் "நீங்கள் செய்யும் இந்தக் காரியம் இந்திய கலாசாரத்திற்கு ஒத்திருப்பதால் மிகவும் நல்ல காரியம்" என்று சொல்லு கிறார்கள். இவ்வாறு வெவ்வேறு கருத்துள்ளவர்களுக்கும் இது பிடித்தமாயிருப்பதால் நாம் அனைவருமே இதில் ஈடுபடுவோமானால் ஒரு புதிய சக்தி உருவாகக்கூடும். அப் பொழுது அடுத்த தேர்தலில் மிகவும் சிறந்தவர்களாகத் தேர்ந்தெடுக்கப் படுவார்களாகையால் அவர்களால் அமைக்கப்படும் அரசாங்கம் மிக்க சக்தி வாய்ந்ததாயிருக் கும். இந்த வேலைத் திட்டத்தினால் இந்தச் சிறந்த விளைவை நாம் எதிர்பார்ப்பதால், நாம் இதில் ஈடுபட்டு உழைத்து 1957க்குள் ஐந்து கோடி ஏக்கர் நிலம் வசூலித்து விநியோ கித்துவிடவேண்டும். ஆனால் இப்பொழுது அடுத்த வருஷத் திலேயே 25 லக்ஷம் ஏக்கர் பூர்த்திசெய்ய வேண்டும்.

சம்பத்து தானம்

இதோடு கூடவே மற்றொரு வேலைத் திட்டமாக சம்பத்து தானம் என்பதையும் ஆரம்பித்துள்ளேன். இது வும் நடைபெறாதபொழுது பூமிதானம் வெற்றிபெறுவதற் கில்லை. இதைச் செய்யாத வரையில் நாம் ஸ்தாபிக்க விரும் பும் பொருளாதார சுதந்திரம், பொருளாதார சமத்துவம் உருவாகாது. விஷயம் ஆரம்பத்திலேயே எனக்குத் தெரிந் ததுதான். ஆனால் என் சுபாவம் ஒன்றைச் செய்யவேண் டும், அதை நன்றாய்ச் செய்யவேண்டும், அவ்வாறு செய் தால் அதன் மூலமாகவே மற்றவையெல்லாம் நிறைவேறி விடும் என்று நம்புவது. ஒரே மூச்சில் இரண்டு காரியங் களை ஏற்றுச் செய்வது சரியல்லவென்று எண்ணுகிறவன் நான். நிலத்தின் பிரசினை அடிப்படையான பிரசினை யாகும். சம்பத்தின் பிரசினை அவ்வளவு முக்கியமான தல்ல. மேலும், அந்த சமயத்தில் பூமிதானப் பிரசினையைக் கவனி யென்று கடவுளின் கட்டளை எவ்வாறு பிறந்ததோ அவ்வாறு சம்பத்து தான விஷயத்தில் பிறக்கவில்லை. ஆண்டவனின் ஏவலைத் தலைமேல் தாங்கிச் செல்லுவது

எனக்கு எப்பொழுதுமே பிடித்தமான தொன்று ஆகை யால் நான் ஆரம்பத்தில் சம்பத்து தான வேலையை ஆரம் பிக்கவில்லை. பிறகு பீஹாரில் நிலப் பிரசினையைத் தீர்க்கும் சந்தர்ப்பம் எழுந்தபொழுது சம்பத்து தானத்தின் மூல மாகவே பூமிதான யக்ஞம் நிறைவேறும் என்பதைக் கண் டேன். இதிலும் சம்பத்தை நாம் நம்பிக்கையில் வாங்கிக் கொள்ளப் போவதில்லை. இதிலும் செயல் பாகுபாட்டு முறையையே அனுசரிக்க வேண்டுமென்பது என் விருப் பம். சம்பத்தை எவர் தானம் கொடுக்கிறாரோ அவ ருடைய அறிவே அதில் பயன்படுத்தப்படும். அவரே நாம் சொல்லும் முறையில் அதை விநியோகம் செய்வார். ஆனால் இதை ஒரு சமூகத்திட்டமாக செய்யக்கூடியசமயம் இன்னும் வரவில்லை. இப்பொழுதைக்கு தனி நபர்கள் அன்புடன் எந்த அளவுக்கு இதைச் செய்ய முடியுமோ அவ்வளவு செய்தால் போதும். தனி நபர்களின் உள்ளத் தில் பிரவேசிப்பதற்கு உதவும் வேலையாகும் இது. சம்பத்து தானம் செய்வோர் பிரதி வருஷமும் தம் ஆயுள் முழுவதும் அதைச் செய்து வருவர். இப்பொழுது என் னிடம் இதைச் செய்ய முன்வந்துள்ள 40, 50, பேர் களுடைய ஜாபிதா ஒன்றிருக்கிறது. நான் அவர்களை நன்கு பரீக்ஷை செய்த பிறகே ஏற்றுக்கொண்டிருக் கிறேன். இவ்வாறு இந்த வேலைத் திட்டத்திற்கும் இத் தகைய சில வரையறைகள் ஏற்படுத்தியிருக்கிறேன். எவர்களிடம் மூட்டையிருக்கிறதோ அவர்கள் அதை அவிழ்த்து இதில் கலந்து கொள்ளுங்களென்று நான் நண்பர்களிடம் சொல்லுகிறேன்.

நூல் காணிக்கை

இதைத் தவிர, மூன்றாவதாக நான் செய்து வருவது நூல் காணிக்கை வேலையாகும். அது மிகவும் சக்தி வாய்ந்த விஷயம். அந்த சக்தியை நாம் இன்னும் புரிந்துகொள்ள வில்லை. காந்திஜியின் நினைவில் உடலுழைப்புக்கு மதிப் பளிப்பதற்கும் நாட்டின் செல்வத்தைப் பெருக்கும்

பொறுப்பை நாம் உணர்ந்திருக்கிறோம் என்பதைப் புலப் படுத்தவும் நூல் காணிக்கை செலுத்த வேண்டும். நான் இதை ஸர்வோதயத்திற்கு அளிக்கப்படும் வோட்டென்று மதிக்கிறேன். இதற்காக நாம் கிராமம் கிராமமாகச் செல்ல வேண்டியிருக்கும் என்பதே இதிலுள்ள தடையாகும். ஆனல் நான் இதைத் தடையென்று கருதாது இந்த நிமித்தமாகவாவது கிராமம் கிராமமாகவும், வீடு வீடாகவும் போவதற்குச் சந்தர்ப்பம் வாய்த்திருப்பதால் இதை நமக்கு உற்சாகமூட்டும் விஷயமாகவே கருதுவேன். ஆகையால் நாம் இதை ஊக்கி வளர்க்கவேண்டும். இருபத்தைந்து லக்ஷம் ஏக்கர் நிலம் பெறுவதென்று உறுதிசெய்து கொண்டிருப்பதைப்போல லக்ஷக்கணக்கான சிட்டங்கள் நாம் சேர்க்க முடியும். உழைப்பின் மதிப்பை வளர்ப்பதற்கு இது பெரிதும் பயன்படும். இதைத் தவிர இன்னொரு விஷயமும் நாம் இதிலிருந்து விரும்புகிறோம். அதாவது: இது வரையில் நாம் நடத்திய எல்லா ஸ்தாபனங்களேயும் பணத்தைக்கொண்டே, பண அடிப்படையிலேயே நடத்தி வந்தோம். அதாவது, பணம் படைத்த நம் நண்பர்கள், நம்மிடம் அன்புள்ளவர்கள் அனுதாபமுள்ளவர்கள் இருக்கிறார்களே அந்த தூய உள்ளம் படைத்தவர்கள் மனமுவந்து கொடுக்கும் பணத்தை நாம் ஏற்றுவந்தோம். ஆனல் இப்பொழுது காலம் மாறிப்போய் விட்டது. இப்பொழுது உழைப்பின் யுகம் உதயமாகியிருக்கிறது. ஆகையால் உழைப்பின் மதிப்பை நாம் வளர்க்கவேண்டும். ஆதலால் ஒவ்வொரு மாகாணத்திலும் உழைப்பையே அடிப்படையாகக் கொண்டு உழைப்பல்லாது வேறு எதையும் பெறுமல் இயங்கும் ஒரு ஸ்தாபனமாவது அமைக்க வேண்டுமென்று விரும்புகிறோம். இந்த நூல் காணிக்கையின் விஷயம் பரவுமானல் இத்தகைய ஸ்தாபனங்களே நம்மால் நடத்த முடியும். அதன் மூலமாக தேஜஸ்விகளான ஊழியர்கள் தோன்றுவார்கள். அவர்கள் வேலையை வளர்ப்பதோடு சிறந்த பிரசாரமும் செய்ய உதவுவார்கள். இது நம்மிடமுள்ள மற்றொரு திட்டம்.

நாம் செய்யும் வேலை மதம் அல்லது சமயப் பணி அல்ல. ஸர்வோதயக்காரர்கள் என்ற சொல்லை எவரும் சொல்லலாகாது. மனித சமூகத்தைச் சேர்ந்தவர்களென் பதைத் தவிர நமக்கு வேறு அடைமொழி எதுவும் கிடை யாது. இவ்வாறு நாம் இருந்து வராவிட்டால் ஸர்வோதய சமாஜத்தை கட்டு திட்டங்களுள்ள ஒரு ஸ்தாபன மென்று நாம் கருதவில்லை யாயினும் அது ஒரு மத, சமய கோஷ்டி யாகி மற்றவர்களிடமிருந்து போய்விடக் கூடும். ஆகை யால் குறிப்பிட்ட ஒருவர் காங்கிரஸ்காரர், இன்னொருவர் சோஷலிஸ்டு என்பது போன்ற வகையில் நாம் பேசவே கூடாது. இந்த இரண்டாவது, மூன்றாவது சொன்ன பெயர்கள் இருக்கின்றனவே அவை வழக்கிலிருந்து தான் வரும். ஏனெனில் மக்கள் அவைகளை ஒத்துக்கொள்ளு கிறார்கள். அந்தப் பெயர்களைக் கொண்டு கட்சிகளும் தோன்றியிருப்பதால் அவர்கள் அவற்றின் உபயோகத்தை ஒப்புகிறார்களென்றாகிறது. ஆனால் நமக்குக் கட்சி எதுவு மில்லை; மூன்றாவது சக்தி என்கிறார்களே அதுவே தான் நாம். அதாவது, இன்றைய உலகப் பேச்சு வழக்கில், எவர்கள் அமெரிக்க கோஷ்டியிலும் சேராமல் ருஷ்ய கோஷ்டியிலும் சேராமலிருக்கிறார்களோ அவர்களே மூன் றாவது சக்தி என்று சொல்லப்படுகிறார்கள். ஆனால் நான் மூன்றாவது சக்தி என்று குறிப்பிடுவது வேறு. அதாவது முதல் சக்தி 'ஹிம்சை சக்தி,' இரண்டாவது 'தண்ட சக்தி,' மூன்றாவது 'நமது சக்தி.' அந்த சக்தி ஹிம்சை சக்திக் கெதிரானது; ஆகவே அது ஹிம்சை சக்தி அல்ல. அது தண்ட சக்தியிலிருந்து வேறுபட்டதாகையால் அது தண்ட சக்தியும் அல்ல. அதற்கே மூன்றாம் சக்தி என்று பெயர். நாம் அந்த சக்தியை எங்கும் பரப்ப விரும்புவதால் நாம் அதை ஒரு சமயக் குழுவாக்க விரும்பவில்லை. நாம் ஸர்வோதயக்காரர்களென்று தனித்திருக்க விரும்பவில்லை. பொதுமக்களுடன் இரண்டறக் கலந்து மனிதர்களாகவே வாழ விரும்புகிறோம்.

என் சகோதரர்களே, தத்துவத்தில் அடங்கியுள்ள எல்லா அம்சங்களையும் நான் உங்களுக்கு விளக்கினேன். ஸர்வோதய சமாஜக் கூட்டத்திற்கு நாம் வருகிறோமென்றால் நாம் எத்தனையோ விஷயங்களைக் குறித்து ஆலோசனை நடத்துகிறோம்; சிந்திக்கிறோம். அவற்றின் நோக்கம் பூரணத்துவம் பெறுவதே. ஆனால் நான் கூறிய இந்த முக்கியமான விஷயங்களைக் குறித்து நீங்கள் சிந்திக்கவேண்டும். இவற்றை நீங்கள் ஆராய வேண்டும். இவற்றைச் செய்வதிலேயே நாம் வரும் வருஷத்தைச் செலவழிக்க வேண்டுமென்பது நம் விருப்பம்.

67916

திருப்பூர் கமலா அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது.